தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த விவரங்களைக் கொடுப்பாரேயானால், இன்னும் எவ்வளவு விரைவாக துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அந்த அளவிற்கு அந்தப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, துணை மின் நிலையம் அமைப்பதில் இருக்கின்ற பெரிய இடர்ப்பாடு இடப் பிரச்சினைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இடப் பிரச்சினை இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தடை ஏதும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

விடுகள் கட்டுதல்

***37742—திரு. என்.எஸ்.என். நடராஜ்:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஜனவரி 21]

பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், அன்னூர் தாலுகா, கீரநத்தம் ஊராட்சி, க.ச.எண் 482/1, 482/2 ஏ.பி-ல் உள்ள பூமி 1995 ஆம் ஆண்டில் குடியிருப்பு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, 214 பேருக்கு கிரயம் செய்யப்பட்டுள்ளது. அதே இடத்தில் தற்பொழுது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் பல அடுக்குமாடி வீடுகளைக் கட்டியுள்ளது. 214 பேருக்குச் சொந்தமான இடத்தில் குடிசை மாற்று வாரியம் அடுக்குமாடி வீடுகளைக் கட்டியுள்ளதால், இவர்களுக்கு அந்த வீடுகளை ஒதுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியென்றாலும், ஆய்வு செய்து, சாத்தியக் கூறுகள் இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு மீண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வரவிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர், பாலமேடு, வாடிப்பட்டி, சோழவந்தான் ஆகிய 4 பேரூராட்சிகளில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, தேவையிருப்பின் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 104-வது வட்டம், திடீர் நகர் திட்டப் பகுதியில் கடந்த இரண்டு வருட காலமாக கணக்கெடுப்பு மற்றும் ஆய்வுகள் நடத்தப்பட்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டது. ஆனால், அங்கு கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு, நிலுவையாக அப்பணி நின்றுவிட்டது. எனவே, தற்பொழுதாவது புதிய குடியிருப்புகள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கணக்கெடுப்பு, எதில் நிலுவை என்று விவரமாகச் சொன்னால் நான் தக்க பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக வீடுகள் ஒதுக்கப்பட்டு, 25, 30 ஆண்டுக் காலமாக பெயர் மாற்றம் செய்யாமல் நிலுவையில் உள்ளது. பலர் அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஓராண்டுக் காலத்திற்குள் பெயர் மாற்றம் செய்து தரப்படும் என்று*

2016 ஜனவரி 21]

இதே அவையில் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் துறையினுடைய உயர் அதிகாரிகளுக்கு அதுசம்பந்தமான உத்தரவுகள் இன்றுவரை போகாததால் அது அப்படியே நிலுவையில் உள்ளது. இந்த ஆண்டிலாவது பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படுமா?

அதேபோல், சமீபத்தில் தருமபுரியில் புதியதாக இரண்டாவது Phase-ல் வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் சிறப்பான முறையிலே கட்டப்பட்டு, நேற்றையதினம்கூட குலுக்கல் நடைபெற்றிருக்கிறது. எனது அரூர் தொகுதி பின்தங்கிய தொகுதி. அரூர் தொகுதியிலே 16 ஏக்கர் பரப்பபளவிற்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய நிலம் இருக்கிறது. வீடுகள் கட்டுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆக, இந்த ஆண்டாவது அரூரிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியது போல், நிலம் பெயர் மாற்றம் செய்வதற்கு வருவாய்த் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 'இப்பொழுது அரூர் தொகுதியில் நிலம் இருக்கிறது, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுமா' என்று கேட்கிறார். உறுப்பினர் கேட்பது பொது மக்களுக்கான வீடுகளா அல்லது அரசு ஊழியர்களுக்கான வாடகை வீடுகளா என்று தெரியவில்லை. இப்பொழுதுள்ள சூழ்நிலையில், அரசு ஊழியர்களுக்கான வாடகை வீடுகள், கிட்டத்தட்ட 3,000 வீடுகளுக்கு மேல் காலியாக இருக்கின்றன. சென்னை, கோவையைத் தவிர்த்து, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் இருக்கின்ற வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் காலியாக இருக்கின்றன. காரணம் 6—வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி வீட்டு வாடகைப் படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதால், தனி வீடுகளில் இருக்க அரசு ஊழியர்கள் விரும்புகிறார்கள். அடுத்தது, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ரூ.15 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சம் வரையிலும்

அவர்களுக்கு வீடு கட்டும் கடன் கொடுக்க அனுமதித்ததால், சொந்த வீடு கட்டியிருக்கிறார்கள். அதனால் இப்பொழுது அரசு ஊழியர்களுக்கு, சென்னை, கோவையைத் தவிர மற்ற இடங்களில் எந்தவிதமான தேவையும் இல்லை. பொது மக்களுக்கு வேண்டுமென்று சொன்னால், கேட்பு இருப்பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

மேம்பாலம்

***49923 திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, கெடார் ஊராட்சி, செல்லங்குப்பம் காங்கேயனூர் சாலையில் பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியத்தில் உள்ள காங்கேயனூர் வழியாக செல்லங்குப்பம், கெடார் செல்லும் சாலையில், பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.